**செப்டம்பர் – 02**

# TNPSC துளிகள்

- ALLY தனிப்பயனாக்கப்பட்ட கண்புரை சிகிச்சை முறையைப் பயன்படுத்தி ரோபோடிக்/எந்திரத் தனிப்பயனாக்கப்பட்ட லேசர் கண்புரை அறுவை சிகிச்சையைச் செய்த இந்தியாவின் முதல் மற்றும் தெற்காசியாவின் இரண்டாவது அரசு நிறுவனமாக இராணுவ மருத்துவமனை ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை (AHRR) அமைப்பு மாறுகிறது.
- குஜராத்தின் சனந்த் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள குறைகடத்திகளுக்கான வடிவமைப்பின் முதல் உற்பத்தி வரையிலான முழுமையான புறத்திறனீட்ட ஒருங்குசேர்ப்பு மற்றும் சோதனைக்கான (OSAT) இந்தியாவின் முதல் சோதனைப் பகுதியினை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் இணைந்து தொடங்கி வைத்தனர்.
- சந்திரயான்-5 ஆய்வுப் பணிக்கான கூட்டுறவினை மேற்கொள்வதாக இந்தியாவும் ஜப்பானும் அறிவித்தன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்குகள் 2025





- 2020 முதல் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களில் 3,041 SC/ST (வன்கொடுமை தடுப்பு) சட்ட வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- மதுரை மாவட்டம்514 வழக்குகளுடன் முதலிடத்தில் உள்ளது.
- பதிவு செய்யப்பட்ட 3,041 வழக்குகளில் மொத்தம் 509 வழக்குகள் (சுமார் 16%) காவல் துறையினரால் 'விவர வழு' காரணமாக ரத்து செய்யப்பட்டன.
- இந்த முறையில் ரத்து செய்யப்பட்ட வழக்குகளில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் புதுக்கோட்டையில் 124 ஆகவும், தேனியில் 97 வழக்குகளாகவும் இருந்தன.

- மதுரையில் பதிவான 514 வழக்குகளில், 76 வழக்குகள் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி ஊமச்சிகுளம் பகுதியில் மட்டும் பதிவு செய்யப்பட்டன.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் சாலை விபத்துகள் 2023

- 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் 480,583 ஆக பதிவாகியுள்ள சாலை விபத்துகளானது முந்தைய ஆண்டை (2022) விட 4.2% அதிகரிப்பைக் காட்டுகிறது.
- 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 18 முதல் 45 வயதுடைய இளைஞர்கள் 66.4% பேர் ஆவர்.
- 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துகள் பதிவானது, அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் அதிக உயிரிழப்புகள் பதிவாகின மேலும் அதிக உயிரிழப்பு எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- மொத்த சாலை வலையமைப்பில் தோராயமாக 5% பங்கினைக் கொண்டுள்ள நெடுஞ்சாலைகளில், 53 சதவீதத்திற்கும் அதிகமான விபத்துகள் மற்றும் 59 சதவீதத்திற்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகின்றன.
- விபத்து காரணமான உயிரழப்புகளில் 45% பங்குடன் இரு சக்கர வாகன ஓட்டிகளின் எண்ணிக்கை அதிக எண்ணிக்கை கொண்ட குழுவாக உள்ளது என்ற நிலைமையில் பாதசாரிகளின் எண்ணிக்கை இரண்டாவது அதிகபட்ச குழுவாக உள்ளது.





## UDISE+ அறிக்கை 2024/25


- வரலாற்றில் முதல்முறையாக, UDISE+ அறிக்கையின்படி, 2024-25 ஆம் கல்வியாண்டில் இந்தியாவின் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1 கோடியைத் தாண்டியுள்ளது.
- இது 2022-23 ஆம் கல்வியாண்டுடன் ஒப்பிடும் போது ஆசிரியர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள 6.7% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- இந்தியாவில் தற்போது சுமார் 15 லட்சம் பள்ளிகளும், 24 கோடிக்கும் மேற்பட்ட

மாணாக்கர்களும் உள்ளனர்.

- ❖ தோராயமாக 50% மாணாக்கர்கள் அரசுப் பள்ளிகளிலும், 41% பேர் தனியார் பள்ளிகளிலும், மீதமுள்ளவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சேர்ந்துள்ளனர்.
- ❖ ஆசிரியர்கள் பிரிவில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது என்பதோடு பள்ளி ஆசிரியர்களில் 54.3 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர்.
- ❖ பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை 48.3 சதவீதத்தினை எட்டியுள்ளது.
- ❖ மாணாக்கர்-ஆசிரியர் விகிதம் (PTR) அனைத்து கல்வி நிலைகளிலும் மேம்பட்டுள்ளது என்பதோடு அடித்தளம், தயார்படுத்துதல், நடுநிலை மற்றும் இடைநிலைக் கல்வி நிலைகளுக்கு PTR முறையே 10, 13, 17 மற்றும் 21 ஆக உள்ளது.




## பெண் நீதிபதிகளின் பிரதிநிதித்துவம்




- ❖ உத்தரகாண்ட், திரிபுரா, மேகாலயா மற்றும் மணிப்பூர் போன்ற பல உயர்

நீதிமன்றங்களில் தற்போது பெண் நீதிபதிகள் இல்லை.

- ❖ நாடு முழுவதும் சுமார் 1,100 அங்கீகரிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி பதவிகள் உள்ளன.
- ❖ அதில், கிட்டத்தட்ட 670 ஆண்கள் பணியாற்றும் நிலையில் 103 பெண்கள் மட்டுமே அதில் பணியாற்றுகின்றனர் என்பதோடு மீதமுள்ள பதவிகள் காலியாக உள்ளன.
- ❖ 2021 ஆம் ஆண்டு முதல், உச்ச நீதிமன்றத்தில் எந்தப் பெண் நீதிபதியும் நியமிக்கப் படவில்லை.
- ❖ தற்போது, உச்ச நீதிமன்ற அமர்வில் ஒரே ஒரு பெண் நீதிபதி மட்டுமே பணியாற்றுகிறார்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு 2025

- ❖ 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29-30 ஆம் தேதியன்று நடைபெற்ற 15வது இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டிற்காக இந்தியப் பிரதமர் ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டார்.
- ❖ இரு நாட்டுத் தலைவர்களும் பாதுகாப்பு, தூய்மையான எரிசக்தி, டிஜிட்டல் துறையில் கூட்டாண்மை, விண்வெளி மற்றும் மனிதவளப் பரிமாற்றங்கள் குறித்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.
- ❖ குறைகடத்திகள் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற முக்கியமானத் துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா-ஜப்பான் பொருளாதாரப் பாதுகாப்பு முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- ❖ இரு நாட்டுத் தலைவர்களும் செயற்கை நுண்ணறிவு மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் கூட்டாண்மை 2.0 எனும் முன்னேடுப்பினைத் தொடங்கி வைத்தனர்.
- ❖ ஜப்பானில் இருந்து இந்தியாவிற்கு 10 டிரில்லியன் யென் மதிப்பிலான தனியார் முதலீட்டு மேற்கொள்வதற்கான இலக்கை இரு தலைவர்களும் நிர்ணயித்தனர்.




## செயற்கை நுண்ணறிவு ஆளுகை முன்னெடுப்புகள்

- ❖ ஐ.நா. பொதுச் சபை செயற்கை நுண்ணறிவு ஆளுகைக்கான இரண்டு உலகளாவிய முன்னெடுப்புகளைத் தொடங்கியது.

- இவை செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஐக்கிய நாடுகளின் சுயாதீன சர்வதேச அறிவியல் குழு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆளுகை குறித்த உலகளாவிய பேச்சுவார்த்தை ஆகும்.
- இந்த முன்னெடுப்புகள் உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு அபாயங்களை நிவர்த்தி செய்தல் மற்றும் அதன் நன்மைகளைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- உலகளாவியப் பேச்சுவார்த்தையானது செயற்கை நுண்ணறிவு தொடர்பான சவால்களைப் பற்றி விவாதிக்க அரசுகள் மற்றும் பங்குதாரர்களுக்கான ஒரு உள்ளடக்கிய UN தளமாக செயல்படும்.
- ஆதார அடிப்படையிலான கொள்கை வகுப்பை ஆதரிக்க அறிவியல் குழு சுயாதீனமான அறிவியல் மதிப்பீடுகளை வழங்கும்.
- இந்தக் குழுவின் வருடாந்திர அறிக்கைகள் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் (ஜெனீவா) மற்றும் 2027 (நியூயார்க்) ஆம் ஆண்டில் நடைபெற உள்ள உலகளாவிய பேச்சுவார்த்தை அமர்வுகளில் முன் வைக்கப்படும்.




## அமெரிக்காவின் IEEPA





- சர்வதேச அவசரகால பொருளாதார அதிகாரச் சட்டத்தின் (IEEPA) கீழ் உள்ள அதிகாரங்களின் கீழ் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பினால் அறிவிக்கப்பட்ட பெரும்பாலான வரி கட்டணங்கள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க நீதிமன்றம்

தீர்ப்பளித்தது.

- தொடர்ச்சியான அமெரிக்க வர்த்தகப் பற்றாக்குறைகள் மற்றும் எல்லை தாண்டிய போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பாக தேசிய அவசரநிலையை அறிவிப்பதன் மூலம் கட்டணங்களை நியாயப்படுத்துவதற்காக, தடைகள் மற்றும் சொத்து முடக்கங்களை மேற்கொள்ள இந்தச் சட்டம் வரலாற்று ரீதியாகப் பயன்படுத்தப் பட்டது.
- இறக்குமதிகளை "ஒழுங்குபடுத்தும்" சட்டத்தின் அதிகாரமானது, கட்டணங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்று நிர்வாகம் வாதிட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## பொருளாதாரத் தகவல் பரப்புரைத் திட்டங்கள்





- ஐக்கியப் பேரரசு, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட 40 நாடுகளில் பிரத்யேக பொருளாதாரத் தகவல் பரப்புரைத் திட்டங்களை மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இந்தியச் சரக்குகள் மீது அமெரிக்கா விதித்த 50 சதவீத வரிக்கு மத்தியில், ஜவுளி ஏற்றுமதியை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- இந்தியத் தொழில்துறையின் முன்னணிப் பங்களிப்போடு, தரமான, நிலையான மற்றும் புதுமையான ஜவுளிப் பொருட்களின் நம்பகமான விநியோக நாடாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டு, இலக்கு சார்ந்த அணுகுமுறையைத் தொடர்வதற்காக இது முன்மொழியப்பட்டுள்ளது.
- இந்தியா ஏற்கனவே 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது என்றாலும், 40 இறக்குமதி செய்யும் நாடுகள் பல்வகைப்படுத்தலுக்கான உண்மையான வாய்ப்பினைக் கொண்டுள்ளன.
- இந்த 40 நாடுகளும் சேர்ந்து, ஜவுளி மற்றும் ஆடை இறக்குமதியில் 590 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமானப் பங்கினைக் கொண்டுள்ளன.
- 2024-25 ஆம் ஆண்டில், ஜவுளி மற்றும் ஆடைத் துறையின் ஒட்டு மொத்த அளவு 179 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 142 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான உள்நாட்டு சந்தையையும், 37 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஏற்றுமதியையும் கொண்டுள்ளது.
- உலக அளவில், ஜவுளி மற்றும் ஆடை இறக்குமதிச் சந்தை 2024 ஆம் ஆண்டில் 800.77

பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.

❖ உலக வர்த்தகத்தில் 4.1 சதவீதப் பங்கைக் கொண்ட இந்தியா, ஆறாவது பெரிய ஏற்றுமதியாளராக உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காற்றுத் தர வாழ்நாள் குறியீடு (AQLI) 2025




❖ 2023 ஆம் ஆண்டு தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கையானது, சிகாகோ பல்கலைக்கழகத்தின் எரிசக்தி கொள்கை நிறுவனத்தினால் (EPIC) வெளியிடப் பட்டது.

❖ 2023 ஆம் ஆண்டில் டெல்லியின் வருடாந்திர PM2.5 செறிவு 88.4 ஆக இருந்தது அதே நேரத்தில் இந்தியாவின் தேசிய சராசரி 41 ஆக இருந்தது.

❖ ஆபத்தான PM2.5 அளவுகள் காரணமாக டெல்லியில் மனிதர்களின் ஆயுட்காலம் 8.2 ஆண்டுகள் குறைக்கப்பட்டுள்ளது.

❖ தேசிய அளவில், அதிக PM2.5 அளவுகள் ஆனது மனிதர்களின் சராசரி ஆயுட்காலத்தை 3.5 ஆண்டுகள் குறைக்கின்றன.

❖ பீகார், ஹரியானா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை முறையே 5.4, 5.3 மற்றும் 5 ஆண்டுகள் என்ற ஆயுட்கால இழப்பைக் காட்டுகின்றன.

❖ வட இந்தியாவில் 544.4 மில்லியன் மக்கள் WHO தரநிலைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் 5 ஆண்டுகள் ஆயுட்காலத்தினை ஈட்டலாம்.

❖ இந்திய மக்கள்தொகையில் 46% பேர், PM2.5 அளவுகள் தேசியத் தரநிலைகளை விட அதிகமாக உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.

❖ PM2.5 அளவை தேசியத் தரநிலைகளுக்கு இணையாக குறைப்பது பாதிக்கப்பட்டப் பகுதிகளில் ஆயுட்காலத்தை 1.5 ஆண்டுகள் வரை கூட்டும்.


❖ இந்தியாவின் தேசியத் தரநிலையைப் பூர்த்தி செய்ய டெல்லி அதன் மாசுபாட்டை 50 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைக்க வேண்டும் மற்றும் ஆயுட்காலத்தை 4.5 ஆண்டுகள் வரை கூட்ட வேண்டும்.

❖ டெல்லியின் மாசுபாட்டில் சுமார் 50% ஆனது உள்ளூர் மூலங்களிலிருந்து ஏற்படுகிறது என்பதோடு தேசியத் தரநிலைகளை பூர்த்தி செய்வதற்கு இதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

- தேசியத் தலைநகர் பகுதி முழுவதும் உள்ள மாசுபாட்டில் 26% குறைப்பது ஆயுட் காலத்தை 1.4 ஆண்டுகள் வரை கூட்டும்.
- தேசியத் தலைநகர் பகுதியின் மாசுபாட்டில் 44% குறைப்பது ஆயுட்காலத்தை 4.8 ஆண்டுகள் வரை கூட்டும்.
- கடந்த ஆண்டு அறிக்கையானது, 2022 ஆம் ஆண்டில் இருந்த மாசு அளவுகளின் அடிப்படையில் டெல்லியில் 7.8 ஆண்டுகள் ஆயுட்காலம் குறைவதைக் குறிப்பிட்டுக் காட்டியது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## SDG 6 இலக்கின் கீழ் WASH முன்னேற்றம்





- உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெஃப் ஆகியவை 6வது நிலையான மேம்பாட்டு இலக்கின் (SDG) கீழ் உலகளாவிய WASH (நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) முன்னேற்றம் குறித்த 2024 ஆம் ஆண்டுக் குறிப்பினை வெளியிட்டன.
- SDG 6 ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பான குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரத்திற்கான உலகளாவிய அணுகலை இலக்காகக் கொண்டுள்ளது.
- 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 961 மில்லியன் மக்கள் பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் குடிநீரை அணுகுவதற்கான வாய்ப்பினைப் பெற்றனர் என்ற நிலையில் இது உலகளாவிய குடிநீர் அணுகலின் பரவலை 68 சதவீதத்திலிருந்து 74% ஆக உயர்த்தியுள்ளது.
- கிராமப்புற குடிநீர் அணுகலின் பரவலை 50 சதவீதத்திலிருந்து 60% ஆகவும், நகர்ப்புற குடிநீர் அணுகலின் பரவலை 83% ஆகவும் அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, 2.1 பில்லியன் மக்கள் இன்னும் பாதுகாப்பான முறையில் வழங்கப் படும் குடிநீர் சேவைகளைப் பெறவில்லை.
- அவர்களில், 1.4 பில்லியன் பேர் அடிப்படை குடிநீர் சேவைகளையும், 287 மில்லியன் பேர் வரையறுக்கப்பட்ட குடிநீர் சேவைகளையும், 302 மில்லியன் பேர் மேம்படுத்தப்படாத நீர் ஆதாரங்களையும், 106 மில்லியன் பேர் மேற்பரப்பு நீரையும் நம்பியுள்ளனர்.
- 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மேற்பரப்பு நீரைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை 61 மில்லியன் குறைந்துள்ளது.
- 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், சுமார் 1.2 பில்லியன் மக்கள் பாதுகாப்பான முறையில் நன்கு மேலாண்மை செய்யப்படும் துப்புரவு சேவைகளை

அணுகும் வாய்ப்பினைப் பெற்றனர் என்பதோடு இது உலகளாவிய துப்புரவு சேவை வழங்கீட்டினை 48% சதவீதத்திலிருந்து 58% ஆக உயர்த்தியது.

- கிராமப்புறத் துப்புரவு சேவை வழங்கீடு 36 சதவீதத்திலிருந்து 49% ஆகவும், நகர்ப்புற துப்புரவு சேவை வழங்கீடு 59 சதவீதத்திலிருந்து 66% ஆகவும் அதிகரித்துள்ளது.
- திறந்தவெளி மலம் கழித்தல் 429 மில்லியன் ஆகக் குறைந்துள்ளது என்ற நிலையில் நகர்ப்புறங்களில், இது தற்போது 1 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, 3.4 பில்லியன் மக்கள் பாதுகாப்பாக மேலாண்மை செய்யப் படும் துப்புரவு சேவையைப் பெறாமல் உள்ளனர் என்பதோடு 1.9 பில்லியன் பேர் அடிப்படை சேவைகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர்.
- உலகளவில் 354 மில்லியன் மக்கள் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தொடர்ந்து பின்பற்றி வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2015 முதல் 2024 ஆம் ஆண்டு வரை, சுமார் 1.6 பில்லியன் மக்கள் அடிப்படை சுகாதாரத்திற்கான அணுகலைப் பெற்றனர் என்ற ஒரு நிலையில் இது உலகளாவிய சுகாதார சேவை வழங்கலை 66 சதவீதத்திலிருந்து 80% ஆக அதிகரித்தது.
- கிராமப்புற சுகாதார அணுகல் 52 சதவீதத்திலிருந்து 71% ஆக உயர்ந்தது அதே நேரத்தில் நகர்ப்புற அணுகல் 86 சதவீதத்தில் நிலையானதாக இருந்தது.
- 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, 1.7 பில்லியன் மக்கள் இன்னும் அடிப்படை சுகாதார சேவைகளைப் பெறவில்லை; மேலும் 611 மில்லியன் மக்களுக்கு எந்தச் சேவையும் கிடைக்கப் பெறவில்லை.

# மாநிலச் செய்திகள்

## ஷாம்லத் நில விற்பனை – பஞ்சாப்




- மொஹாலி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சங்கங்கள் மற்றும் பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் பொது (ஷாம்லத்) நிலத்தை ஏலம் விடுவதற்கான நிர்வாகத்தின் உத்தரவை எதிர்த்தனர்.
- ஜமீன் பச்சாவ், பிண்ட் பச்சாவ் (நிலத்தைக் காத்து, கிராமங்களைக் காத்தல்) குழுவின் தொடக்கத்தையும் இந்த ஆர்ப்பாட்டம் குறித்தது.
- ஷாம்லத் நிலம் என்பது கிராமப் பஞ்சாயத்துகள் கூட்டாக இணைந்து, நிர்வகிக்கும் கிராம பொது நிலத்தைக் குறிக்கிறது.
- அவை வரலாற்று ரீதியாக மேய்ச்சல், சமூக இடங்கள் அல்லது கூட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.
- வருவாய்ப் பதிவுகளில் ஷாம்லத் தே, ஷாம்லத் டிக்காஸ் என விவரிக்கப்பட்டுள்ள நிலங்கள் மற்றும் பொதுவான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பிற ஒத்த

வகைப்பாடுகள் இதில் அடங்கும்.

- கிராமப் பஞ்சாயத்தில் உள்ள ஷாம்லத் தே நிலங்கள் முன்னர் தனிநபர்கள் கொண்டுள்ள எந்தவொரு தனியுரிமை உரிமைகளையும் நீக்குகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## IPL போட்டிகளிலிருந்து அஸ்வின் ஓய்வு




- மூத்த இந்திய சுழற்பந்து வீச்சாளர் இரவிச்சந்திரன் அஸ்வின் இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளிலிருந்து (IPL) ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- ஒட்டு மொத்தமாக, 221 IPL போட்டிகளில் பங்கேற்ற அவர், சிறந்த 4/34 ரன்களுடன், 30.22 சராசரியுடன் 187 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
- பேட்டிங்கில், அதிகபட்சமாக 50 ரன்கள் மற்றும் சராசரியாக 13.02 ரன்களுடன் அவர் 833 ரன்கள் எடுத்தார்.
- 38 வயதான அவர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆஸ்திரேலிய சுற்றுப்பயண போட்டிகளின் போது சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.
- டெஸ்ட் போட்டிகளில் அனில் கும்ப்ளேவுக்கு (619) அடுத்தபடியாக அதிக விக்கெட்டுகளை (537) வீழ்த்திய இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையினைப் பெற்றார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★